# பதினோராம் திருமுறையில் அறக்கருணை - மறக்கருணை

**முனைவர் ச. ரஞ்சனி**

**உதவிப்பேராசிரியர் ( தமிழ்),**

**இரத்னவேல் சுப்பிரமணியம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி ,**

**சூலூர். கோவை.**

**4**

**ஆய்வுச்சுருக்கம்**

தமிழ் இலக்கியவரலாற்றில் பக்தி இலக்கியங்கள் முக்கிய இடத்தைப் பெறுகின்றன. அவ்வகையில் பன்னிருவர் பாடிய பதினோராம் திருமுறையில் இடம்பெற்றுள்ள நாற்பது இலக்கியங்களில் ஒன்று கோபப்பிரசாதம். நக்கீர தேவநாயனார் இயற்றிய கோபப் பிரசாதம் ஆசிரியப்பாவில் 100 அடிகள் கொண்ட இலக்கியமாகும். கோபம் - சினம், பிரசாதம் - அருள். இறைவனது சினம், அருள் ஆகிய இருவகைப்பாங்கினையும் விளக்குவதாய் கோபப் பிரசாதம் அமைகின்றது. இறைவனிடம் இருந்து அறக்கருணை, மறக்கருணை என்னும் இவ் இரண்டும் ஆன்மாக்களது தரத்திற்கு ஏற்ப வெளிப்படுகின்றன. இவ்வாறு சிவனாரது கருணைத் திறத்தை இணைத்து விளக்கும் முயற்சி காரணமாக எழுந்த இலக்கியமே கோபப்பிரசாதம் ஆகும். சிவபெருமானின் இருநோக்கு அடிப்படையில் இந்நூல் பாடப்பட்டுள்ளது. 'தவறு பெரிதுடைத்தே' என்ற தொடர் முதலும் முடிவுமாக அமைந்துள்ளது. சிவபெருமானின் அருளும் ,ஒறுப்பும் இந்நூலில் பாடப்பட்டுள்ளன. அறக்கருணைக்கு ஒரு சான்றும், தொடர்ந்து மறக்கருணைக்கு ஓர் எடுத்துக்காட்டும் அமையுமாறு பாடல்கள் பாடப்பட்டுள்ளன. இறைவனிடமும் அறக்கருணையாகிய மருந்துநோக்கும், மறக்கருணையாகிய நோய்நோக்கும் என்னும் இரு நோக்குகளும் உயிர்களின் உய்தி கருதி இறைவனால் மேற்கொள்ளப்படும் அணுகுமுறைகளாகும். ஒரு மனிதன் மற்றவனுக்குத் தீங்கிழைத்து விட்டால் அவன் நாணி வருந்தும்படி நன்மை செய்வதே சாலச்சிறந்தது என்கிறார். எனவே ஆதியும், அந்தமும் இல்லா இறைவன் மனித உயிர்க்கு எவ்வாறு அரணாக இருந்து அருள்பாலிக்கிறான் என்பதை உணர்த்தவே நக்கீரதேவ நாயனார் கோபப்பிரசாதம் எனும் புத்திலக்கிய வடிவத்தை இயற்றியருளியுள்ளார் என்பது புலனாகின்றதை இக்கட்டுரை ஆய்வு வடிவில் எடுத்துரைக்கின்றது.

**திறவுச் சொற்கள்**

கோபப்பிரசாதம் ,பெயர்க்காரணம்,நூலமைப்பு,மருந்துநோக்கு : அறக்கருணை

நோய்நோக்கு : மறக்கருணை ,இறைவனின் சிறப்புக்கள்,எண்ணலங்காரச் சிறப்புக்கள்

புத்திலக்கிய வடிவம்.

**முன்னுரை:**

சிவபெருமானாகிய சிவபரம்பொருள் சைவத்தின் முழுமுதற்கடவுளாவார். இவர் எண் குணத்தினர். இவ்வெண் குணங்களுள் பேரருள் உடைமையும் ஒன்றாகும். இறைவனிடம் இருந்து அறக்கருணை,

மறக்கருணை என்னும் இவ் இரண்டும் ஆன்மாக்களது தரத்திற்கு ஏற்ப வெளிப்படுகின்றன. இவ்வாறு சிவனாரது கருணைத் திறத்தை இணைத்து விளக்கும் முயற்சி காரணமாக எழுந்த இலக்கியமே கோபப்பிரசாதம் ஆகும்.

**பெயர்க்காரணம்:**

நூறு அடிகள் கொண்ட ஆசிரியப்பா சிவனார் தன் வழி நில்லாத தீயோரைக் கோபித்தும், தன் அருள்வழி ஒழுகும் நல்லோரைக் காத்தும் மன்னுயிர்களின் நலன் கருதிச் செய்தருளிய தெறலும் ,அளியுமாகிய இருவகைச் செயல்களை அடுத்தடுத்துக் கூறும் நூலாகும். 'இன்னவை பிறவும் எங்களீசன் கோபப்பிரசாதம்' என ஆசிரியர் நக்கீர தேவநாயனார் கூறுவதால் இந்நூல் பெயர் கோபப்பிரசாதம் என்பது தெளிவாகின்றது.

கோபம் + பிரசாதம் = கோபப்பிரசாதம். இங்கு கோபம் என்பது வெகுளியின் விளைவாகிய தண்டித்தல் தொழிலையும், பிரசாதம் என்பது அருளின் விளைவாகிய அளித்தல் தொழிலையும் உணர்த்துகின்றன.

**நூலமைப்பு:**

சிவபெருமானின் இருநோக்கு அடிப்படையில் இந்நூல் பாடப்பட்டுள்ளது. 'தவறு பெரிதுடைத்தே' என்ற தொடர் முதலும் முடிவுமாக அமைந்துள்ளது. சிவபெருமானின் அருளும் ஒறுப்பும் இந்நூலில் பாடப்பட்டுள்ளன. அறக்கருணைக்கு ஒரு சான்றும், தொடர்ந்து மறக்கருணைக்கு ஓர் எடுத்துக்காட்டும் அமையுமாறு பாடல்கள் பாடப்பட்டுள்ளன. திருவள்ளுவர் இன்பத்துப்பாலில் தலைவன் கூற்றாக, "இருநோக்கு இவளுண்கண் உள்ளது

என்று குறிப்பிடுவது இறைவனுக்கும் பொருந்துகின்றது எனலாம். இறைவனிடமும் அறக்கருணையாகிய மருந்துநோக்கும், மறக்கருணையாகிய நோய்நோக்கும் என்னும் இரு நோக்குகளும் உயிர்களின் உய்தி கருதி இறைவனால் மேற்கொள்ளப்படும் அணுகுமுறைகளாகும். அறம், மறம் என்னும் இவையிரண்டுமே நன்மை பயத்தலால் இறைவனது நோக்கின் பெருமை புலப்படுகின்றது.

**மருந்துநோக்கு -அறக்கருணை**

இறைவனார் நோக்கு மருந்திற்குப் பொருந்துவதாகும். இறைவனது இந்நோக்கு பிறவிப்பிணியைப் போக்கும் அறமாகும். சிவனது அறக்கருணையை ஆசிரியர் பின்வருமாறு தக்கசான்றுகள் வழி பட்டியலிடுகிறார்.

1. திருமால், சிவபெருமானை நாள்தோறும் ஆயிரம் தாமரை மலர்களைக் கொண்டு வழிபட்டு வருநாளில் ஆயிரம் மலர்களுள் ஒரு மலர் குறைய, அம்மலருக்கு ஈடாகத் தன்னுடைய கண்ணைப் பெயர்த்துச் சிவனார் வழிபாட்டை நிறைவு செய்தார். இதுகண்ட சிவனார் திருமாலின் அன்புக்குப் பெரிதும் மகிழ்ந்து சலந்தரனைத் தண்டித்ததற்குப் பயன்பட்ட ஆழியைத் திருமாலுக்கு அருளினார்.

2. இறைவன் எளியோனுக்கு எளியோனாய் இருந்து அருளும் தன்மையும், படைக்கும் பொருள் எதுவாயினும் அது உள்ளன்பினோடு கூடியதாயின் அதனை ஏற்க மறுப்பதில்லை. இன்னமுது படைத்தோர்க்கு அருளத் தவறுவதுமில்லை என்பதை, காட்டு வேடனாகிய கண்ணப்ப நாயனார்

இறைச்சியைப் படைக்க அப்பொழுது இறைவனின் கண்களில் வடியும் இரத்தத்தை நிறுத்த முடியாமல் தன் கை, கால்களால் அதைத் தடுத்து அம்புகொண்டு தன் கண்ணைப் பறித்து இறைவனுக்குப் பொருத்த முயன்றபொழுது, இறைவன் கண்ணப்ப நாயனாருக்குக் காட்சி தந்து அருளினார். இத்தன்மை அறக் கருணையாகும்.

3. விசாரசருமருக்கு சண்டீசபதம் அருளியமை

4. தேவர், அசுரர் என்னும் இரு திறத்தாரையும் நஞ்சுண்ட வழிக் காத்து திருநீலகண்டர் ஆனமை .

5. சாக்கியனார் தம்மீது எறிந்த கல்லையே மலராகக் கருதி கருணை செய்தமை.

6. திருநந்தி தேவர் மூன்று முறை தவம் இருந்தமைக்கு நெற்றிக்கண்ணும், நான்கு தோள்களும், திருக்கயிலை மலையைக் காக்கும் பொறுப்பும் அருளியமை.

7. பாணாசுரன் என்ற அசுரனுக்கு சாரூபமுத்தி அருளியும், நடனக் காலத்துக் குடமுழா வாசிக்கும் பேற்றையும், எருதின்கண் அமரும் பேற்றையும் அருளியமை.

8. உமையவளை வழிபடாத பிருங்கி முனிவருக்கு உமையம்மை உடலை வற்றச் செய்ய நடப்பதற்கும் வலிமை இழந்தார். இறைவன் ஒருகோலும் காலும் அருளியமை.

9. நந்திமாகாளருக்கு மிக்க வரம் அருளி திருக்கயிலைக் காவலராக்கியமை,

10. பார்த்தனாகிய அருச்சனனுக்குப் பாசுபத அத்திரமும், அம்பறாத் தூணியும் அருளியமை.

11. குபேரனை அளகாபுரிக்கு அரசனாக்கி நிதிபதியாக்கி அருளியமை.

12. மறைமுனிவராம் மார்க்கண்டேயனுக்குச் சிரஞ்சீவித் தன்மை அருளியமை.

13. சிலந்தியின் சிவபத்தியைப் போற்றி சிவபிரான் சீர்மலி சிலந்திக்கு இன்னரசு அளித்துச் சிறப்பித்தமை,

14. சிவபிரான் ஆசிரியத் திருமேனி தாங்கித் தென்திசை நோக்கி கல்லால மரநிழலின்கண் அமர்ந்து சனகாதி முனிவர்கட்கு அறம் முதலானவற்றை உபதேசித்து அருளியமை. இவ்வாறு திருமாலுக்கு ஆழி அருளப்பட்டது முதல் ஆலின் கீழமர்ந்து முனிவர்களுக்கு அறம் உரைத்தல் ஈறாக உள்ள பதினான்கு பதிவுகளை நக்கீரதேவநாயனார் இயற்றிய இலக்கியம் தெளிவாக உணர்த்துகின்றது. இவை சிவபரம்பொருளின் அறக்கருணைக்கு ஆசிரியர் குறிப்பிடும் சான்றுகளாகும்.

**நோய்நோக்கு -மறக்கருணை**

ஒருவரைக் கோபம் கொண்டு வெறுத்தலாகாது, அதற்கு மாறாகத் தன்னை வழிபட்டாலும், வழிபடா விட்டாலும், அறநெறி அல்லாது தீயநெறியில் செல்பவர்களை நல்வழி வர ஒறுத்து இறைவன் அருள்பாலிக்கும் தன்மையே மறக்கருணை எனக் கூறப்படுகின்றது. நோய் செய்யும் நோக்கு எனப் பொருள்படாமல் நோயை நீக்கும் நோக்கு எனப் பொருள்படுத்தும் நிலையில் பின்வருமாறு விளக்குகின்றார்.

1. நான்முகனது ஐந்து தலைகளுள் ஒன்றை அவரது செருக்குக் காரணமாகச் சிவனார் கொய்தமை,

2. காமனை நெற்றிவிழியால் நீறாக்கினமை

3. காலனைக் காலால் உதைத்தமை

4. திரிபுரத்தை எரித்தமை

5. யானைவடிவம் கொண்ட கயாசுரனைக் கிழித்து யானைத் தோலைப் போர்த்திக் கொண்டமை

6. திருக்கயிலையைப் பெயர்க்க முயன்ற இராவணன் மீது 'ஒருவிரல்' ஊன்றினமை

7. தக்கன்யாகத்தில் பங்கு பெற்றமைக்குத் தண்டனையாகப் பன்னிரண்டு சூரியர்களுள் ஒருவனான பூடா என்பானது பற்கள் உதிர்க்கப்பட்டமை,

8. சிவசிந்தனை செய்த தக்கன் இயற்றிய மாபெரும் வேள்வி வீரபத்திரால் சிதைக்கப்பட்டமை,

9. தக்கன் தொடங்கிய வேள்வியில் அவியுணவு பெறுதற்கு நீட்டிய நெருப்புக் கடவுளின் கைகள் துண்டிக்கப்பட்டமை,

10. தக்கன் வேள்விக்கண் பங்குபெற்ற சந்திரன் திருவடியால் தேய்க்கப் பெற்றமை,

11. சலந்தரன் உடலை அவனே தடிந்து கொள்ளும் வகையில் சக்கரப் படையால் மறக்கருணை செய்யப்பட்டமை,

12. தாருகனைக் கொல்லும் பொருட்டுக் காளிதேவி தோற்றுவிக்கப்பட்டமை

13. சிவனார் கருடனது செருக்குக் காரணமாகக் கயிலையயில் இயதேவரைக் கொண்டு சிறகொடித்தமை,

மேற்குறிப்பிட்ட பதின்மூன்று மறச்செயல்களும் இவை போன்ற பிறவும் சிவபெருமானின் மறக்கருணைக்குச் சான்றுகளாகும். சிவபெருமான் தன்னை உளம் உருகி நினைத்து வழிபடுவோர்க்கு அருள்புரிந்தும் தன்னை வழிபட்டாலும், வழிபடாவிட்டாலும் அறநெறி அல்லாது தீய நெறியில் செல்பவரைத் திருத்தி ஒறுத்து அருள்வதை அறக்கருணை, மறக்கருணை என்று நக்கீரதேவ நாயனார் சிறப்பாகக் கூறியுள்ளார். அறம், மறம் என்னும் இவையிரண்டுமே நன்மை பயத்தலால் இறைவனது நோக்கின் பெருமை புலப்படுகின்றது.

**இறைவனின் சிறப்புக்கள்**

இறைவன் செய்தருளும் அருஞ்செயல்களை நான்முகன், இந்திரன் முதலிய தேவர்கள் ஓரளவு எடுத்துரைத்தற்கு ஏற்ற அறிவுடையார் என்றாலும், பெருங்கடல் நீரைக் கையினால் இறைக்க முயன்ற குருடனைப் போன்று அறிவாற்றல் பெறாது என்றும், ஆசிரியர் விளக்கியுள்ளார்.

மேலும் சிவபெருமானைச் சரண் எனச் சாராது ஏனைத் தேவர்களைக் கடவுளாகக் கருதுவோர் முயலைத் தொடராது இழிந்த காக்கையைப் பிடிக்கச் செல்லும் வேடர்களாகிய மூடர்களைப் போன்றவர்கள் என்றும், குளிர்நீங்கச் சுடர் வழங்கவல்ல விளக்கிருக்கும்போது அதனைப் பயன்படுத்தாமல் மின்மினிப் பூச்சியைத் தீயென மயங்கிக் குளிர்காய நினைக்கும் பேதையரைப் போன்றவர்கள் என்றும் உவமைகளால் குறிப்பிடுகின்றார். இதனை,

“தனைமுன் விட்டுத் தாம்மற்று நினைப்போர்
மாமுயல் விட்டுக்
காக்கைப் பின்போம் கயவர் போலவும்
விளக்கங் கிருப்ப மின்மினி கவரும்

அளப்பரும் சிறப்பில் ஆதர் போலவும்"[2]

என்ற பாடலடிகள் உணர்த்துகின்றன.

பரம்பொருளாகிய தெய்வம் தன்னை வழிபட்டாரது குடும்பத்தை மேன்மேல் உயர்த்தும், பேராற்றலும் பெருங்கருணையும் உடையது என்னும் உண்மையினை,

"குடிசெய்வ லென்னும் ஒருவற்குத் தெய்வம்

முடிதற்றுத் தான் முந்துறும் "[3]

எனவரும் திருக்குறளில் தெய்வப்புலவர் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளார். வள்ளுவர் கூறிய இத்தெய்வத்தன்மை இந்திரன் முதலிய தேவர்களுக்கு இல்லை என்பதனை,

“கச்சங்கொண்டு கடுந்தொழில் முடியாக் கொச்சைத் தேவர்"4

என்று கூறுவதன் மூலம் அறியமுடிகின்றது.

இவ்வாறு ஐம்புல வேட்கையால் சிக்குண்டு வருந்தியும், இவ்வுலக வாழ்வில் தாம்பெற்ற சிற்றறிவையே பேரறிவாகக் கருதியும், இறைவனை இன்ன தன்மையன் என அவனருளால் உணர்ந்து கொள்ளாதவர்கள் மூர்க்கர்களாக உள்ளார்கள் என்றும், இவர்களால் உலகில் பல தொல்லைகள் ஏற்படுகின்றன என்பதும், இவர்களின் உயிரைக் கூற்றுவன் இப்பொழுதே கவர்ந்து செல்லுதல் கூற்றுவனது கடமையாகும் என்றும், இக்கடமையை உரிய காலத்தில் செய்யாத கூற்றம் பெரிதும் குற்றமுடையதே என்றும் நக்கீர தேவநாயனார் குறிப்பிடுகின்றார்.

எண்ணலங்காரச் சிறப்புக்கள்

கோபப்பிரசாதத்தில் நக்கீரதேவநாயனார் பரமனை எண்ணலங்காரச் சிறப்புடன் வருணித்துப் பாடியுள்ளார். ஒருவகைத் தேவரும், இருவகைத் திறமும், மூவகைக் குணமும், நான்மறைகளும், ஐம்பெரும் பூதங்களும், அறுவகைச் சுவைகளும், எழுவகை ஓசைகளும், எண்வகையான ஞானமும், ஒன்பது வகையாக உள்ள ஒளியுள்ள மலர்களின் சிறப்பும், பத்து வகையாக உள்ள பரமனை என்று ஒன்று முதல் பத்து வரையுள்ள எண்ணலங்காரச் சிறப்புடன்

இந்நூல் பாடப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கதாகும்.

**புத்திலக்கிய வடிவம்**

கோபப்பிரசாதம் ஒருவகைப் புத்திலக்கியம் ஆகும். இது பக்தியிலக்கியத்திற்குப் புதுவரவும் ஆகும். ஆசிரியரால் இடப்பட்ட பெயர் கோபப்பிரசாதம். தன் குழந்தைத் தவறிழைக்கும் போது தண்டித்துப் பின் தன் தவறை உணரவைத்து அரவணைப்பவள் தாய். தனக்கே தீங்கு இழைத்தாலும் தவற்றை வெறுத்து ஒதுக்கிக் குழந்தையை உயிர்போல் காப்பாள். ஒருதாயின் தன்மையே இத்தன்மையது எனின் இறைவனின் தன்மையை எண்ணி அளக்க மானுடப் பிறவிகளால் இயலாதது.

“இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண

நன்னயம் செய்து விடல்"5

என்னும் வள்ளுவர் வாக்கும் இதனை உறுதிப்படுத்தும். ஒரு மனிதன் மற்றவனுக்குத் தீங்கிழைத்து விட்டால் அவன் நாணி வருந்தும்படி நன்மை செய்வதே சாலச்சிறந்தது என்கிறார். எனவே ஆதியும்,

அந்தமும் இல்லா இறைவன் மனித உயிர்க்கு எவ்வாறு அரணாக இருந்து அருள்பாலிக்கிறான் என்பதை உணர்த்தவே நக்கீரதேவ நாயனார் கோபப்பிரசாதம் எனும் புத்திலக்கிய வடிவத்தை இயற்றியருளியுள்ளார் என்பது புலனாகின்றது.

**அடிக்குறிப்புகள்**

1. திருவள்ளுவர், திருக்குறள், கு.எண். 1091.
2. நக்கீரதேவ நாயனார், கோபப்பிரசாதம், பா. அ.75 - 78.
3. திருவள்ளுவர், திருக்குறள், கு.எண்.1023.
4. நக்கீரதேவநாயனார், கோபப்பிரசாதம், பா.அ. 81 - 82.
5. திருவள்ளுவர், திருக்குறள், கு.எண். 314

**பின்ணிணைப்புகள்**

நடராசன்.பி.ரா., பதினொராந் திருமுறை உரை
கழக வெளியீடு, சென்னை – 1971.

பதினொராந் திருமுறை காசித்திருமடம்
திருப்பனந்தாள்,
பங்குனி பரணி வெளியீடு.

பன்னிரு திருமுறைகள் தமிழ்நிலையம்
சென்னை.

அழகப்பன்.வெ.சு., பதினொராந் திருமுறைத் திறன்
கண்ணம்மை பதிப்பகம்,
காரைக்குடி,
முதற்பதிப்பு - 1987.

நூல் அகராதிகள்
கழகத் தமிழகராதி,
கழக வெளியீடு,
முதற்பதிப்பு-1964.